

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றியம் கழக நிர்வாகி ஓட்டுனர் நாகராஜ் அவர்களின் இல்ல திருமண வரவேற்பு விழா கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் கி.வேணு ஆனந்த் தலைமையில் நடைபெற்றது. இதில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ் பாரதி, முன்னாள் அமைச்சர் ஆவடி சாமு.நாசர், கழக அமைப்புத் துணைச் செயலாளர் தாயகம் கவி, மாவட்ட கழகச் செயலாளர் வல்லூர் எம்.எஸ். கே.ரமேஷ் ராஜ், ஆகியோர்கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள். இதில் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ. பரந்தாமன் அவர்களை ஆதரித்து தேர்தல் பணியாற்ற பல்லாவரம் வடக்கு பகுதி மற்றும் பல்லாவரம் தெற்கு பகுதி கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட கிணார் ஊராட்சி பாகம் 91 இல் தேர்தல் பணி ஆற்றுவது குறித்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் பல்லாவரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி தாம்பரம் மாநகராட்சி மண்டல தலைவர் பல்லாவரம் வடக்கு பகுதி கழக செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ எஸ்.பொன்னார் மதுராந்தகம் தெற்கு ஒன்றிய செயலாளர் பொன். சிவக்குமார் விவசாய அணி துணை அமைப்பாளர் ஜே. அரசு காஞ்சி மாவட்டக் கழக இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன் பல்லாவரம் பகுதி கழக நிர்வாகிகள் ச. சிவக்குமார் டி. கே. கார்த்திகேயன் எஸ். மணித்தக்கின் கோ.முத்துக்கிருஷ்ணன் ரா. ஐயப்பன் , ஜி. எஸ். டி. தேவராஜ் இரா.ஹரி, மனோஜ் கிணார் ஊராட்சி கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

## விடுமுறை தினங்கள் – பண்டிகை காலங்களில், தொலைதூரம் செல்லும்

# பயணிகளின் இன்னல்களை போக்கும் வகையில் ரயில் சேவைகளை மேம்படுத்த வேண்டும்!

## ஒன்றிய அமைச்சருக்கு கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் எம்.பி. கடிதம்!

சென்னை, செப்.19-

விடுமுறை தினங்கள், வார இறுதி நாட்கள் மற்றும் பண்டிகை காலங்களில் சென்னை - திருச்சி, சென்னை - கோவை, சென்னை - மதுரை, சென்னை - நெல்லை ஆகிய முக்கிய வழித்தடங்களில் பயணிகள் சிரமமின்றி தங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்ல ரயில் வசதி மற்றும் கூடுதல் சேவைகளை அதிகப்படுத்தவும் பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்கும் ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க, கழகத் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து ஒன்றிய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

**லட்சக்கணக்கான மக்கள் நீண்ட தூரம் பயணம்!**

லட்சக்கணக்கான மக்களுக்கு நீண்ட தூர பொதுப் போக்குவரத்தின் முதன்மையான மற்றும் கட்டணம் குறைவான பயணமாக ரயில் பயணம் விளங்குகிறது. இருப்பினும், முன்பதிவு செய்யப்பட்ட டிக்கெட்டுகளைப் பெறுவது மிகவும் கடினமாகிவிட்டது. முக்கியமான வழித்தடங்களில் முன்பதிவு தொடங்கிய சில நிமிடங்களிலேயே டிக்கெட்டுகள் விற்று தீர்ந்துவிடுகின்றன. அவசரமான, எதிர்பாராத அல்லது தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாக முன்கூட்டியே தங்கள் பயணத்தைத் திட்டமிட முடியாத பயணிகளை இது கடுமையாகப் பாதிக்கிறது.

வார இறுதி நாட்கள் மற்றும் பண்டிகை விடுமுறை நாட்களில், சென்னையில் இருந்து தங்கள் சொந்த ஊர்களுக்கு ஏராளமான பயணிகள் பயணிக்கும்போது மிகவும் சிரமமான சூழலை சந்திக்க நேரிடுகிறது. ஏற்கனவே சாலை மார்க்கத்தில் கடுமையான போக்குவரத்து நெரிசல் நிலவும் நிலையில் (குறிப்பாக கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் கடும் நெரிசல் நிலவுகிறது.) தனியார் பேருந்து நிறுவனங்கள், பயண நெரிசல் மிகுந்த காலங்களில் வழக்கமான கட்டணத்தைவிட பல மடங்கு கட்டணம் வசூலிப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் விளைவாக, ஆயிரக்கணக்கான பயணிகள் தங்கள் கடைசி நேர மற்றும் குறைந்த பயண கட்டண தேர்வாக ரயில் சேவையை நாடுகின்றனர். எனினும், குறைவான சேவைகளாலும் போதுமான ரயில் பெட்டி வசதிகள் இல்லாததாலும் கடும் சிரமங்கள் ஏற்படுகிறது. பொதுப் பெட்டிகளில் (General Compartments) பயணிகள் கூட்டம் அதிகமாவதால் பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் உட்பட பயணிகள் பல மணிநேரம் நின்று பயணிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றனர். சில சமயங்களில் கழிப்பறைகளை ஒட்டியுள்ள பகுதிகளில் கூட மிகவும் சிரமமான சூழலில் நிற்க நேரிடுகிறது.

**தொலைதூரப் பயணங்கள்!**

உள்ளூர் ரயில்களில் மட்டுமல்லாமல், தொலை தூரப் பயணங்களிலும் படிக்கட்டுகளில் தொங்கிக்கொண்டு பயணிக்கும் (Footboard Travel) நிகழ்வுகளை நாம் அதிகமாகக் காண்கிறோம். இந்த நெரிசல் காரணமாக, முன்பதிவு செய்யாத பயணிகள் முன்பதிவு செய்யப்பட்ட ரயில் பெட்டிகளுக்குள் (Reservation Coach) நுழைகின்றனர். இதனால் முறையான முன்பதிவு செய்திருக்கும் பயணிகளுடன் தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்படுகின்றன. இத்தகைய நிகழ்வுகளை தனிப்பட்ட பயணிகளுக்கு இடையிலான மோதல்களாக மட்டும் பார்க்கக்கூடாது.

இதன் அடிப்படைப் பிரச்சனை, பயணிகள் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான வசதிகள் அல்லது அதிக எண்ணிக்கையிலான ரயில் பெட்டிகள் இல்லாததே ஆகும். சாதாரண நாட்களில் பயண நெரிசல் மிகுந்த நேரங்களிலும், நகரங்களில் வசிப்பவர்கள் பண்டிகைக் காலங்களில் தங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்பும் பயணக் காலங்களிலும் பிரச்சனைகளை தொடர்ந்து சந்திக்க நேரிடுகிறது.

உங்களுக்கு நினைவிருக்கலாம், நெரிசலைக் குறைக்க நெரிசல் மிகுந்த நேரங்களில் (Peak Hours) கூடுதல் ரயில்களை இயக்குவது மற்றும் அனைத்து ரயில்களிலும் 'மூடிய கதவு அமைப்பை' (Closed Door System) செயல்படுத்துவது போன்ற விஷயங்களை, 11.06.2025, 31.05.2022 மற்றும் 17.08.2019 தேதியிட்ட கடிதங்கள் மூலம் அமைச்சகத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன்.

மேலும் நாடாளுமன்றத்திலும் பலமுறை இது குறித்துப் எடுத்துரைத்துள்ளேன். பட்ஜெட் முன்மொழிவுகளில் சேர்ப்பதற்கான ஆலோசனைகள் கோரப்பட்டபோது, மாண்புமிகு நிதியமைச்சரிடமும் இதே கோரிக்கையை முன்வைத்திருந்தேன். சென்னை கோட்டத்தின் கீழ் வரும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான பல கூட்டங்களில், தெற்கு ரயில்வேயின் பொது மேலாளரின் கவனத்திற்கும் இக்கோரிக்கை கொண்டு செல்லப்பட்டுள்ளது.

**கூடுதல் ரயில்களை இயக்க வேண்டும்!**

எனவே தொடர் விடுமுறைகள், பண்டிகை காலங்கள் மற்றும் பயணிகள் வருகை வழக்கத்தை விட அதிகமாக இருக்கும் என்று கணிக்கக்கூடிய மற்ற நாட்களிலும் தமிழ்நாட்டில் சென்னை - திருச்சி, சென்னை - கோவை, சென்னை - மதுரை, சென்னை - நெல்லை ஆகிய முக்கிய வழித்தடங்கள் மற்றும் அதிக தேவை உள்ள வழித்தடங்களில் கூடுதல் ரயில்களை இயக்க வேண்டும்.

பயணிகளின் எண்ணிக்கை மற்றும் கடந்தகாலத் தேவையின் அடிப்படையில், அதிக தேவை உள்ள வழித்தடங்களில் இயங்கும் ரயில்களில் முன்பதிவில்லாத பொதுப் பெட்டிகளின் (General Coaches) எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

செயல்பாட்டு ரீதியாகச் சாத்தியமான இடங்களில், அதிக பயன்பாட்டில் உள்ள வழித்தடங்களில் இயங்கும் பொருத்தமான ரயில்களில் குறைந்தது 10 முன்பதிவு செய்யப்படாத பெட்டிகளை இணைக்க வேண்டும்.

முன்பதிவு மற்றும் பயணிகள் குறித்த கடந்தகாலத் தரவுகளைப் பயன்படுத்தி, மிக அதிக தேவை இருக்கும் காலங்களைக் கண்டறிந்து, முன்கூட்டியே கூடுதல் சேவைகள் மற்றும் பெட்டிகளை வழங்கும் வகையிலான 'தேவை சார்ந்த முன்கணிப்பு அமைப்பை' (Predictive DemandBased System) உருவாக்க வேண்டும்.

கூடுதல் வசதிகள் தேவை என்பது தெளிவாகத் தெரியும் வகையில் அதிக பயன்பாட்டில் உள்ள ரயில் வழித்தடங்களுக்குக் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

நீடித்த விடுமுறை நாட்களில் போதுமான இடவசதி இருப்பதை உறுதி செய்ய வேண்டும். இதன் மூலம் பயணிகள் பாதுகாப்பற்ற மற்றும் கடும் நெரிசல் மிகுந்த சூழலுக்குத் தள்ளப்படுவது தவிர்க்கப்படும். பயணிகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, அனைத்து ரயில் பெட்டிகளிலும் 'மூடிய கதவு அமைப்பை செயல்படுத்த வேண்டும்.

இவ்வாறு தயாநிதி மாறன் எம்.பி. கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### கே.ஏ.இளங்கோவன் தலைமை! எஸ்.சுந்தரவரதன் – கே.இரவி– எம்.அரசு முன்னிலை!

# காஞ்சிபுரம் மாவட்ட தொ.மு.ச கவுன்சில் சார்பில் தொழிலாளர் விரோத ஒன்றிய-மாநில அரசுகளைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

## இரா.பொன்னுராம் தலைமை! மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் கண்டன உரை!

காஞ்சிபுரம்,செப்.19-

தமிழ்நாடு முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் தொழிலாளர் விரோத, மக்கள் விரோத, விவசாயிகள் விரோத மற்றும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை கண்டித்து

காஞ்சிபுரம் மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் 22.9.2026- செவ்வாய்கிழமை காலை 10.00 மணிக்கு நடுத்தெரு, காஞ்சிபுரம் தாலுக்கா அலுவலகம் எதிரில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு காஞ்சிபுரம் மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் தலைவர் கே.ஏ.இளங்கோவன் த.லைமை வகிக்கிறார்.

மாவட்ட தொ.மு.ச. செயலாளர் பெ.சுந்தரவாதன் ,செங்கற்பட்டு மாட்ட தொ.மு.ச. தலைவர் கே .இரவி,மாவட்ட கவுன்சில் பொருளாளர் எம்.அரசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

க.உதயபாஸ்கர், பி.தியாகராஜீலு, எஸ்.ஜானகிராமன், எஸ்.வீரபத்திரன் ,பி.எஸ்.குடியரசு ஆகியோர் வரவேற்று பேசுகின்றனர். கண்டன ஆர்பாட்டத்திற்கு அகில இந்திய தொ.மு.ச. துணைத் தலைவர் இரா. பொன்னுராம் தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் கண்டன உரை நிகழ்த்துகிறார்.

இதில் சிறுவேடல் க.செல்வம ம் எம்.பி., சி.வி.எம்.பி.எழிலரசன், சி.கே.வி. தமிழ்ச்செல்வன், எம்.எஸ்.சுகுமார், சன்பிராண்ட் கே. ஆறுமுகம், V.S.ராமகிருஷ்ணன், SKP.சீனிவாசன், S.சிகாமணி, மேயர் எம்.மகாலட்சுமியுவராஜ், நித்தியாசுகுமார், தி. அன்பழகன், கே.ஏ. செங்குட்டுவன், ஏ.எஸ்.முத்துசெல்வி, ஜெகன்நாதன்பி நிர்மலா, கு.சுப்பிரமணி, கே.திலகர், எஸ்.சந்துரு, அ. தசரதன், சு.வெங்கடேசன், எஸ்.சுகுமாறன், த.விஸ்வநாதன், எஸ்.மாமல்லன், ப.சுரேஷ், பி.சங்கர், எஸ்.ரவிக்குமார், ஜெ.வரதராஜன், எஸ்.சேகர், அ.பாலமுருகன், எஸ்.வி.பிரகாஷ், பா.கார்த்திகேயன், அ.யுவராஜ், நாத்திகம் நாகராசன், ஏ.செல்வி, டி.ஜெய்கணேஷ், டி.சத்தியமூர்த்தி, ஜெ.செல்வம், எம்.எஸ்.பாலன் , ஜெ. தேவிகா, கு.அருளானந்தம், டி. வித்தகவேந்ன், சி.எம்.பிரபு, ப.சுகுமார், மு.ஆறுமுகம், எ.சரவணன், எம்.வி.இளம்பரிதி, எஸ்.அரவிந்த்குமார், ஆர்.கே.தம்பிதுரை, டி. வெங்கட்ராமன், சாட்சி,ஜெ. சண்முகசுந்தரம், விஜயகுமார், எஸ்.ஸ்ரீபால், தாவூத் அபுபக்கர் - தொ.மு.ச.சார்பாக எம்.சுதாகரன், ஏ.முரளி,

V.M.இராமலிங்கம், M.வெங்கிடேசன், S.அசோக்குமார், V.நடஜன், N.ஏழுமலை, E.தினகரன், P.கமலநாதன், K.ஆறுமுகம்,K.சிவக்குமார், G. பாலாஜி, S.பார்த்தசாரதி, N,தாஸ், K.பழனி M.செல்வகுமார், M.முருகன், P.அருளானந்தன்,S.சக்திவேல், R.பிச்சாண்டி, P.வீரமணி, T. எல்லப்பன், K.பாண்டியன், D.இராஜேஷ், B.நடராஜன், பி.அறிவழகன் P.S.இளங்கோ, P.ஆறுமுகம், S. அறிவழகன், D.எளியேசன், V.சுகுமார், சந்திரமோகன், ஜானகிராமன், இராமு, ஆனந்தன், மீனாட்சி சுந்தரம், A.சுந்தர்ராஜன், ஜெயக்குமார், A.ஐயப்பன், M.யுவராஜ் , J.விஜயராஜ் இரா.தேவராசன்,வி.நடராசன் -,R.உந்தியப்பன், S.E. சிவக்குமார், D.ஸ்ரீனுவாசன், V.திருநாவுக்கரசு, T.M.விஜயகுமார் J.அமித்பாஷா, ஆர்.மோகன்ராஜ், மண்டி கே.சம்பத், மல்லிகா ராமகிருஷ்ணன், எம்.மகாதேவன்,விஜயா, கீதா மாவிரமேஷ், த.குமரன், மாமல்லன் மண்டிவரதன்மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

A.C.ஜெயராமன் N.வரதன், R.சம்பத் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

# மதுராந்தகம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல்

## தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் மற்றும் ஒருங்கிணைந்த சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், திருவண்ணாமலை கடலூர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் ஆகிய மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி அறிவிப்பு!

நடைபெற உள்ள மதுராந்தகம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி,

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் மற்றும் ஒருங்கிணைந்த சென்னை - காஞ்சிபுரம் - திருவள்ளூர் - விழுப்புரம் - திருவண்ணாமலை - கடலூர் - வேலூர் - இராணிப்பேட்டை - திருப்பத்தூர் ஆகிய மாவட்ட மற்றும் இம்மாவட்டங்களில் உள்ள மாநகர ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் வருகிற 21-09-2026 திங்கட்கிழமை, காலை 10.00 மணி அளவில் மதுராந்தகம் தொகுதியில் உள்ள பெரும்பேர்கண்டிகையில் உள்ள "பொன்மலர் இல்ல வளாகத்தில்" ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் மருதூர் இராமலிங்கம் அவர்கள் தலைமையிலும் - மாநில நிர்வாகிகள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில இணைச் செயலாளர்கள் - மாநில துணைச் செயலாளர்கள் மற்றும் ஒருங்கிணைந்த சென்னை - காஞ்சிபுரம் - திருவள்ளூர் - விழுப்புரம் - திருவண்ணாமலை - கடலூர் - வேலூர் - இராணிப்பேட்டை - திருப்பத்தூர் ஆகிய மாவட்ட மற்றும் இம்மாவட்டங்களில் உள்ள மாநகர ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் ஆகியோர் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : மதுராந்தகம் (தனி) தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளரை ஆதரித்து பிரச்சார உத்திகள் - குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 18.09.2026

**ஆ. கிருஷ்ணசாமி**
செயலாளர்,
ஆதிதிராவிடர் நலக்குழு தி.மு.க.



சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் எழும்பூர் தெற்கு பகுதியில் மிசாக் காலக்கொடுமைகளை நெருப்பாற்றில் நீந்திய காலம் எனும் தலைப்பில் மாபெரும் கருத்தரங்கம் பெரியார் திடலில் நேற்று மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னிலையில், எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி. சுதாகர் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் திராவிட கழகத் தலைவர் ஆசிரியர் வீரமணி கழக துணை பொதுச்செயலாளர் திருச்சி என். சிவா எம்.பி, தமிழ் தேசிய விடுதலை இயக்க பொதுச்செயலாளர் தோழர் தியாகு ஆகியோர் உரையாற்றினர். மேலும் இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன் ப.தாயகம் கவி, கே எஸ் ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, டாக்டர் ஏ.பி. பூர்ணிமா, பி கே மூர்த்தி, எம்.விஜயகுமார்,கே சந்துரு, சி. மகேஷ் குமார்,ஷேக் அப்துல்லா, வே.உமாகாந்தன்,பரிதிஇளம்சுருதி, ,மாவட்ட நிர்வாகிகள் ஜி எம் தேவன், புனிதவதி எத்திராஜன்,, பகுதி கழக செயலாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். வட்ட கழகச் செயலாளர்கள் வி.விஜயகுமார், ஆர்.பாபு. ஆகியோர் நன்றி கூறினார்கள்.



சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு தலைமையில், அண்ணாநகர் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம் முன்னிலையில், அ.தி.மு.க. நிர்வாகிகள் அக்கட்சியிலிருந்து விலகி திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர். அ.தி.மு.க. சிறுபான்மைப் பிரிவு அண்ணாநகர் பகுதிச் செயலாளர் ஏ.எஸ். ராஜி, சிறுபான்மைப் பிரிவு அண்ணாநகர் பகுதித் துணைச் செயலாளர்கள் வி. ராபார்ட், எஸ்.எம்.. ரோமேஷ், ஜேசுராஜா மற்றும் 103வது வட்டப் பேரவைத் துணைச் செயலாளர் என். அசோக்குமார் ஆகியோர் தங்களைத் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.